**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No. 113/2011** **Date:21 /08/2024**

**PW** 1 அப்துல் ஜமீல் சாயபு

4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

கிராம நிர்வாக அலுவலர் மூலம் பட்டா மாறியுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2010 ம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் பட்டா மாறியுள்ள விவரம் எனக்கு தெரியவந்தது. சுப்பிரமணி என்ற கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் சொத்தை விலைக்கு கொடுக்க முடியுமா என்று கேட்டார். பொதுவாக பட்டா மாற்றம் செய்யும்போது கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், துணை வட்டாச்சியர் அறிக்கையின் பேரில்தான் பட்டா மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். 20.04.2010 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். 30.04.2004 தேதியிட்ட கணினி சிட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை யார் மாற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 4 வது எதிரியை நான் கேட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் உத்தரவின்பேரில்தான் பட்டாவை

CMS BLR

மாற்ற முடியும் என்றால் சரிதான். கணினி பட்டாவை மாற்றியது யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சிட்டாவை வைத்துதான் 4வது எதிரி சிட்டாவை வழங்கியதாக எனக்கு தெரியும். 4வது எதிரி கணினியில் உள்ள சிட்டாவை எடுத்து கொடுத்தார் என்றால் சரியல்ல. 4வது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.போலீஸார் என்னை 20.04.2014 அன்று விசாரணை செய்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-.
Judicial Magistrate No.I,
Perambalur.

JMPBLR